வ.எண். 499 நாள்: 05/08/2016

செய்தி

வரும் 7–ந் தேதி

திங்கள்நகரில் தேசீய கைத்தறி தினம் கொண்டாட்டம்

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் 7–ம் தேதி தேசீய கைத்தறி தினமாக கொண்டாடப்படும் என பிரதமர் மோடி அறிவித்தார். அதன்படி கடந்த ஆண்டு சென்னையில் பிரதமர் மோடி தலைமையில் முதலாவது கைத்தறி தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

கைத்தறியின் சிறப்பினை உலகம் முழுவதும் முன்னெடுத்து சொல்லும் விதமாகவும், கைத்தறி நெசவாளர்களை சிறப்பிக்கும் வகையில் ஆகஸ்ட் 7–ந் தேதி தேசீய கைத்தறி தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டு பிரதமர் தலைமையில் வாரணாசியில் இரண்டாவது கைத்தறி தினம் கொண்டாடப்படுகிறது. அதே நேரத்தில் மாநிலங்களிலும், மாவட்ட அளவிலும் செயல்பட்டு வரும் கைத்தறி குழுமங்கள் மூலமாக தேசீய கைத்தறி தினம் கொண்டாடப்படவுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம்

இதன்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்கள் அதிகம் வாழ்கின்ற திங்கள்சந்தை பகுதியில் செயல்பட்டு வரும் குருந்தன்கோடு கைத்தறி குழுமம் சார்பாகவும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை, நாகர்கோவில் சார்பாகவும் தேசீய கைத்தறி தினம் கொண்டாட சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

வருகிற ஆகஸ்ட் 7–ந் தேதி திங்கள்நகர் ஆரோக்கியநாதர் அரங்கத்தில் காலை 10.00 மணிக்கு அரசின் கைத்தறி நலத் திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் கைத்தறி நெசவாளர்களுக்கு மத்திய–மாநில அரசுகள் வழங்கும் நலத்திட்டம் தொடர்பான விளக்கம் குறித்து துறை அதிகாரிகளால் நடத்தப்படவுள்ளது. மேலும் மேற்படி நிகழ்ச்சியில் குருந்தன்கோடு கைத்தறி குழுமத்தின் சார்பாக நெசவாளர்களுக்கு தறி உபகரணங்கள், பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் புங்கர் பீமா யோஜனா திட்டத்துடன் இணைந்த சிக்ஷா சகாய யோஜனா திட்டத்தின் கீழ் நெசவாளர் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல் ஆகியவை நடைபெறுகிறது.

<u>மாபெரும் இலவச மருத்துவ முகாம்</u>

விழாவில் காலை 10.30 மணிக்கு குலசேகரம் ஸ்ரீ மூகாம்பிகை மருத்துவ கல்லூரி மருத்துவ குழுவினரால் நெசவாளர்களுக்கு அனைத்து வித நோய்களுக்கான மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

ஏற்பாடுகளை கைத்தறி மற்றும் துணிநூல் துறை உதவி இயக்குநர் திரு. ந. சுந்தரராஜ் மற்றும் குருந்தன்கோடு கைத்தறி குழும நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்

Submitted
ந. சுந்தரம்
4.8.2016
A.D. Handlooms